கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மார்கழி மாத இதழ்
NEWS BULLETIN
DECEMBER 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
04/01/2025 முதல்	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெற இருக்கின்றது
11/01, 18/01/2025	தமிழ்ப் பாடத்துக்கான தவணைக் பரீட்சைகள்
18/01/25	தைப்பொங்கல் விழா
25/01/25	தமிழ்த்திறன் போட்டிகள்


SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	1.00pm – 2.00pm
SUNDAYS	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	10.00am – 12.00am



CHANGE OF VENUE OF THE TAMIL SCHOOL

PLEASE BE ADVISED THAT COVENTRY TAMIL WELFARE ASSOCIATION'S TAMIL SCHOOL WILL RELOCATE TO A NEW PREMISES FROM 04/01/25 SATURDAY ONWARDS
45 BLONDVIL ST, COVENTRY CV3 5EQ
BUS ROUTE INFORMATION:
THOSE WHO TRAVEL TO SCHOOL BY BUS CAN USE BUS NUMBERS 17, 17A, 21.





45 Blondvil St

ஒளிவிழா

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஒளிவிழா 21/12/2024 காலை 11 மணிமுதல் STOKE CLUB COVENTRY மண்டபத்தில் நடைபெற்றது. மாணவர்கள் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகள், நத்தார் பாப்பாவின் ஆடல் பாடல் என அரங்கம் நிறைந்த அவையோரோடு, மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.







கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோறன்ஸ் அவர்களின் மாணவிகளான செல்வி ஆஷ்கா கோபிகரன், செல்வன் ஜோயல் மத்தேயூ கிறிஸ்ரி, செல்வன் லிங்கா சர்வானந்தலிங்கம்,



செல்வன் டிர்த்தீன் ஜெயதீஸ்வரன் ஆகியோரும், செல்வன் சஜித் கேதீஸ்வரன், செல்வன் லக்ஸன் திருவரங்கன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் ஆகியோரும் கிறீஸ்தவப் பாடல்களை சுரத்தட்டு மூலம் வழங்கியிருந்தார்கள்.



. யேசுபாலனின் பிறப்பு பற்றிய இசையும் கதையும் ஆசிரியர்கள் திருமதி அனற்செபமலர் கிருஷ்ணதாஸ், திருமதி ரஜனி யேசுராசா, திருமதி தவமலர் திருநாவுக்கரசு, திருமதி சிவாஜினி அமலதாஸ், திருமதி கமலினி பகீஸ்வரன், செல்வி ரி.ஃபனி லோறன்ஸ், மாணவர்களான செல்வன் டெனிஷியன் றொபின்சன் அமலதாஸ், செல்வன் கவிசன் மயூரன், செல்வன் தரணிஸ் ஜெயந்தன், செல்வன் பவிஷன் அரவிந்தன், செல்வன் மதுசன் கஜேந்திரா செல்வன் ஆதிஸ் பகிஸ்வரன், செல்வி மாதுரி பகிஸ்வரன், செல்வன் அருஸ் கோகிலநாதன், செல்வி ஒகஸ்ரா றொபேட் மக்ஸிமாஸ், செல்வன் ஒஸ்ரின் றொபேட் மக்ஸிமாஸ் ஆகியோர் வழங்கியிருந்தார்கள்.



அத்துடன் பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும், விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குமான பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

பங்குபற்றிய வெளி நிகழ்வுகள்

DIVERSITY TOGETHER என்னும் அமைப்பினரால் XMAS EXTRAVAGANZA என்னும் நிகழ்வு 15/12/2024 அன்று MERCIA மண்டபத்தில் நடைபெற்றது.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "பரதக்கலாவித்தகர்" "கலைமாணி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் செல்விகளான தன்ஷிகா சிவா ஜெயர்த்திகா ஜெயதீஸ்வரன், அர்ச்சனா ரமணன், ஆரதி சியாமளன், சஸ்மிதா பாஸ்கரன் ஆகியோர் நடன நிகழ்வை வழங்கியிருந்தார்கள்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" நுண்கலைமானி ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகள் செல்விகளான சஹானா ராகுலன், லினிஷா மணிகண்டன், மோகிதா வசந்தகுமார், நேகா தினேஷ்குமார், ஒகஸ்ரா றோபேட் மக்ஸிமாஸ், ஜனுஜா அகிலன் ஆகியோரும் நடன நிகழ்வை வழங்கியிருந்தார்கள்.




WORLD PEACE AND HARMONY நிறுவனத்தால் இணைய வழியில் நடத்தப்படும் நிகழ்வில் 17/12/2024 அன்று கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஸ்தாபகரும், தலைவருமான மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்கள் கொவன்றியில் தமிழர் நலன்புரிச் சங்கத்தை ஆரம்பித்ததற்கான தேவைகளைப் பற்றி உரையாற்றினார்.



22/12/2024 அன்று கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியை திருமதி ரஜனி உதயசேகரன் அவர்கள் இந்தியாவின் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் ஊடாக மேற்படிப்புகளைக் கற்பதன் மூலம் பெறும் நன்மைகளைப் பற்றி உரையாற்றினார்.

பிரதி வியாழக்கிழமை தோறும் இணைய வழியில் நடைபெற்றுவரும் கதம்பம் நிகழ்வில், 26/12/2024 அன்று புலம்பெயர் தமிழரும் தமிழ் மொழியும் - செல்வன் நீரஜன் பகீரதன் அவர்களும், கிறீஸ்துவின் மகிமை பற்றி தமிழ் ஆசிரியை திருமதி அனற்செபமலர் கிருஷ்ணதாஸ் அவர்களும், வீணை இசையினை செல்வி கௌரி கலாதரன், திருமதி சரவணகுமாரி சுப்பையா ஆகியோரும் எமது பாரதியார் பற்றி செல்வி ஸ்ரீசந்தனா பிரபு சங்கர் அவர்களும் நிகழ்வுகளை வழங்கி இருந்தார்கள். எமது பாடசாலை நிகழ்வுகளை திரு கந்தையா அரியரத்தினம் ஐயா தொகுத்து வழங்கினார்.















29/12/2024 அன்று SWANSWELL PARK இல் நடைபெற்ற CELEBRATE SWANSWELL எனும் நிகழ்வில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "பரதக்கலாவித்தகர்" கலைமாணி ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் செல்விகளான வர்ஷிதா ஜெயசங்கர், தருண்யா பகீரதன், மோனிக்கா ஜெய்கணேஷ் ஆகியோர் நடன நிகழ்வை வழங்கியிருந்தார்கள்.

ஈழத்து புலமைகள் (பாகம் 25)

கடந்த இதழிலே !
காரை நகர் கார்த்திகேயபுலவரின் புலமை பற்றியும் ஆளுமைகள் பற்றியும்
பார்த்திருந்தோம்;
இவ்வித்தழிலே அதன் தொடர்ச்சியைக் காண்போம்;

புலவரவர்கள் காரைதீவிலே தாமாகவே ஒரு வித்தியாசாலையை
ஆரம்பித்து நடாத்திவந்தார் எனமுன்னைய இதழில் குறிப்பிட்டிருந்தேன்..
அவ்வித்தியாசாலையில் கார்த்திகேய புஅவரது மகன்களும்கற்றுவந்ததாக
அறிகிறோம்.அவரது மகன்களில் ஒருவராகிய சிவசிதம்பர ஐயர் அவர்கள் கந்த
புராணத்து மகேந்திர காண்டத்திற்கு சிறந்த உரை எழுதியுள்ளதாக
அறியக்கிடைகிறது.

அக்காலத்திலும், யாழ்ப்பாணத்தில் இருந்து பல பத்திரிகைகள் வெளிவந்துள்ளன.
அவற்றிலே குறிப்பிடக்கூடியவை: "இலங்கை நேசன்" "உதய
பானு","விஞ்ஞானவர்த்தனி"
இந்தக்காலத்திலே பலர் "கம்ப இராமாயணம்" தேவாரம் ,திருவாசகம்
படித்துக்கொண்டிருக்கிறார்கள் ஆனால் அக்காலத்திலேயே தூர நோக்குடன
விஞ்ஞான வளர்ச்சியின் தேவையறிந்து, விஞ்ஞானமே உலகை ஆளும் என்ற
உண்மையை உணர்ந்து " விஞ்ஞான வர்த்தனி" என்ற பெயரில் விஞ்ஞான
ஆய்வுகளையும் தகவல்களையும் வெளியிட்டிருகிறார்கல் யாழ்ப்பாணத்தில்.,
நிற்க ::
உதய்பானு பத்திரிகையின மீது கைதை ஒன்றினைக் காண்போம்"

"தாரகைகண் மறையத்துண் மதி சாய்ந்தோட
தடுத்தெ திர்வஞ்சரையழித்து தங்கு மந்த
காரரிருளினை யோட்டி வெளியதாக்கிச்
சந்தேகமின்றி யொருபொருளை யாரு

மோரவே தெரிந்துண்மையினையுணர்த்தி
யுலகமெங்குஞ் சென்றவரு முவந்து போற்ற
சேருதய பானுவினை யவனி மீதிற்
றிகளுதய பானு வெனச் செப்பலாமே"
இப்போது "விஞ்ஞான வர்த்தனி" என்ற பத்திரிகை மீது பாடிய கவிதை
ஒன்றினைக்காண்போம்.

"மயக்கந்தீரா கம நூல்யாவும் பார்த்து
மனமதனை புலன் வழிச் செல்லாமல் போர்த்து
தயக்கரிய மர்க்கலிருடன்னை திர்த்துச்
சற்சனருக்கிடுக்கணுறா த்ருளைக்கூர்ந்து
பயக்கவரு மரன்புகழை சொல்லியார்த்து
பாங்கான முத்தி வழியதனிற் சேர்த்து
வியக்கவுறு மெஞ்ஞானி தனைப் போற்பாரின்
மெய்ஞ்ஞானவர்த்தினியே மேவிற்றன்ரறோ"

ஒருதடவை , தமிழறிஞரும் புலவரும் ஆசியாவிலேயெ சிறந்த சட்ட வல்லுனரும்,
சென்னை மாகாண உயர் நிதிமன்ற நீதியரசராக கடமையாற்றியவருமான
திரு.சி.வை. தாமோதரம்பிள்ளையவர்களைச் சந்தித்த போது பிள்ளையவர்கள் ஒரு
கவிதைக்குரிய இறுதி அடியைக் கொடுத்து
முன்னே வரும் மூன்று அடிகளையும் பாடச் சொன்னாராம்.
அந்த அடி_____-

"கற்றைச் சடையடைத் தேவே கயி
லைக் கரைக் கண்டனே"_____

புலவர் உடனே-
எற்றைக்கும் முன்னடி பேணும் வரமே யெனக்கருள்வை
பற்றைக்களைத்திடு ஞானிகள் போற்றும்பழம்பொருளே

பெற்றமுகத்திடு மங்கையொள் பங்க பிறையுலவுங்
கற்றை டசடையுடைத்தேவே கயிலைக் கறைக்கண்டனே"

எனப் பாடிமுடித்தாராம்.

(அடுத்த இத்தழில் தொடரும்)

ஆசிரியர் தவத்துரை மாணிக்கம்





